# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## Sessions Case No.7/2020

| | |
|---|---|
| Deposition of witness for | : PW-1 |
| Name | : விஜயலட்சுமி |
| Father's / Husband Name | : க.பெ.ரமேஸ் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 16th day of October 2025.

**<u>எதிரி ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் முனிசிபல் காலனி, அம்மாபேட்டை, சேலத்தில் குடியிருந்து வருகிறேன். சேலம் மாநகராட்சியில் டெங்கு விழிப்புணர்வு தினக்கூலியாக வேலை செய்கிறேன். இறந்துபோன ஆறுமுகம் எனது மகன் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். 03.02.2019-ம் தேதி மாலை 04.00 மணியளவில் நெல்சன் பாலாவும், சபரி என்பவரும் நான் வீட்டிலிருந்தபோது எனது வீட்டிற்கு பதட்டத்துடன் வந்து எனது வீட்டிற்கு அருகில் உள்ள மாநகராட்சி பள்ளியில் பரத்குமார் நெல்சன் பாலாவிடமும், சபரியிடமும் ஒரு ரூபாய் கொடுத்து பீடி வாங்கி வரச்சொன்னார் என்றும் அவர்கள் வாங்கி கொண்டு கொடுக்க

போகும்போது எனது மகன் ஆறுமுகம் பரத்குமாரை கெட்ட வார்த்தையால் திட்டினார் என்றும் அதற்கு பரத்குமார் எத்தனை நாளுக்கு நான் உன்னிடம் திட்டு வாங்கி கொண்டிருப்பேன் என்றும், உன்னை இன்றே முடித்துவிடுகிறேன் என்று கூறி அவரது கையில் வைத்திருந்த பிளேடை எடுத்து ஆறுமுகத்தின் குரல்வளையில் மாறிமாறி அறுத்தும், இடது கை மணிக்கட்டு, தாடை, காது ஆகிய இடங்களில் பிளேடால் அறுத்தும், ஆறுமுகத்தின் வாயை பொத்தி சுவற்றில் ஓங்கி அடித்தார் என்றும், ஓங்கி அடித்த போது தலையில் அடிபட்டு ஆறுமுகம் கீழே விழுந்தார் என்றும் பிறகு சபரியும், நெல்சன் பாலாவும் அங்கிருந்து பயந்து என்னிடம் மேற்படி சம்பவம் பற்றி சொன்னார்கள் என்றும் பிறகு நானும் எனது மகள் பிரியங்காவும் எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள மாநகராட்சி பள்ளியின் முதல்மாடியில் நாங்கள் சென்று பார்த்தபோது எனது மகனின் குரல்வளை, இடது கை மணிக்கட்டு, தலை, வலது பக்க காது ஆகிய இடங்களில் வெட்டுக்காயத்துடன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். நானும் எனது மகளும் கையில் தூக்கிக்கொண்டு வந்து ஆட்டோவின் மூலமாக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு மருத்துவர் எனது மகனை பரிசோதித்து பிறகு இறந்துவிட்டதாக கூறினார். அதன்பிறகு நான் அம்மாபேட்டை காவல்நிலையம் வந்து அதுகுறித்து நானே புகார் எழுதிக் கொடுத்தேன். அந்த புகார் என்னிடம் காட்டப்படுவதுதான், அந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் **அதசாஆ.1** ஆகும். அதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்**) எதிரியின் வழக்கறிஞர் ஆஜரில் இல்லை – குறுக்கு விசாரணை இல்லை.</u>

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.